173

18 FEB 1999

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைப்படி அரசு நிதியிலிருந்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி பங்கீடு செய்தல்- 1998-99 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டது- திருத்திய ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நநி 2)துறை**

அரசாணை(நிலை)எண்.248 நாள்: 28.12.1998

**படிக்கவும்:**

1. நகராட்சி நிர்வாக ஆணையர் நே.மு.க.எண்.18031/98/பி3 நாள் 30.4.98.
2. பேரூராட்சிகளின் இயக்குநர் கடித எண்.8118/98/21 நாள் 4.5.98.
3. நகராட்சி நிர்வாக ஆணையர் நே.மு.க.எண்.18031/98/பி 3 நாள் 5.5.98.
4. கருவூலம் மற்றும் கணக்குகள் ஆணையர் நே.மு.க.எண்.ஆர்சி/64116/91/ஆர்2 நாள் 13.3.98.
5. அரசாணை(நிலை)எண்.87, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் [illegible].5.98.

--------

**ஆணை:**

மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைப்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கு 98-99ம் ஆண்டிற்கான நிதி மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.839.3848 கோடியாகும். இதில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.321.0570 கோடி நிர்ந்தளிக்கப்பட்டது. இத்தொகையை பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து 25.5.98 நாளிட்ட அரசாணை(நிலை)எண்.87ல் ஆணை வெளியிடப்பட்டது. தற்போது திருத்திய நிதி மதிப்பீட்டின்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.815.9344 கோடியாகும். எனவே மேற்சொன்ன ஆணையை இரத்து செய்து கீழ்க்கண்டவாறு திருத்திய ஆணை வெளியிடப்படுகிறது.

2. 1998-99 ஆம் ஆண்டு மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைப்படி .ள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.815.9344 கோடியாகும். அவற்றில் 5 சதவிகித சமன்பாடு மற்றும் ஊக்க நிதிக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ.122.3902 காடியாகும். மீதமுள்ள 85 சதவிகித தொகையான ரூ.693.5442 கோடியை ஊரக ள்ளாட்சி அமைப்புகளும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் 55:45 என்ற விகிதத்தில் கிர்ந்து கொள்ளும். சமன்பாடு மற்றும் ஊக்க நிதியை ஊரக உள்ளாட்சி அமைப்புகளும் கர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் 60:40 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளும். இதன்படி 998-99 ஆம் ஆண்டிற்கான நிதி மதிப்பீட்டில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ற்கண்ட நிதிப்பங்கீட்டிற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

| | சமன்பாடு/ ஊக்க நிதி | 45விழுக்காடு பகிர்வு |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | |
| ..ருராட்சிகள் | 18.6033 | 118.5961 |
| நகராட்சிகள் | 15.1764 | 96.7494 |
| ..ராட்சிகள் | 15.1764 | 96.7494 |
| மொத்தம் | 48.9561 | 312.0949 |

மேற்கண்ட நிதிப்பகிர்வின்படி 1998-99 ஆம் ஆண்டு நகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கான நிதி ஒதுக்கீடு கீழ்க்கண்டவாறு அமையும்.

**நகராட்சிகளுக்கான நிதி ஒதுக்கீடு:**

| | |
|---|---|
| 98-99 ஆம் ஆண்டுக்கான<br>l ஒதுக்கீடு | ரூ.96,74,94,000<br>(ரூபாய் தொண்ணூற்றாறு கோடியே எழுபத்து நான்கு இலட்சத்து தொண்ணூற்று நாலாயிரம் மட்டும்) |
| ாட்சி ஊழியர் ஓய்வூதிய நிதிக்கான<br>ண்டுத் தேவை | ரூ.14,48,44,250 |
| வொரு காலாண்டும் ஒதுக்கப்பட வேண்டியது | ரூ. 3,62,11,063 |
| ல மேம்பாட்டிற்காக நகராட்சி நிர்வாக ஆணையர்<br>நிறுத்தி வைக்கக் கோரப்படும் தொகை | ரூ.20,00,00,000 |
| முள்ள இருப்பு | ரூ.62,26,49,750 |

முள்ள இருப்புத் தொகையான ரூ.62,26,49,750/- (ரூபாய் அறுபத்திரண்டு கோடியே இருபத்தாறு இலட்சத்து நாற் த்தொன்பதாயிரத்து எழுநூற்றைம்பது மட்டும்) கீழ்க்கண்ட முறையில் [illegible]கலாம் என கருதப்படுகிறது.

| | ஒரு ஆண்டுக்கு | ஒவ்வொரு காலாண்டுக்கும் |
|---|---|---|
| மக்கட் தொகை பங்கு(45%) | 28,01,92,387 | 7,00,48,097 |
| பட்டியல் வகுப்பினர்/ பட்டியல் பழங்குடியினர் பங்கீடு(10%) | 6,22,64,975 | 1,55,66,244 |
| தனி நபர் வருமான பங்கீடு(15%) | 9,33,97,463 | 2,33,49,366 |
| தனி நபர் செலவின பங்கீடு(30%) | 18,67,94,925 | 4,66,98,731 |
| மொத்தம் | 62,26,49,750 | 15,56,62,438 |

II. மாநகராட்சிகளுக்கான நிதி ஒதுக்கீடு: ரூ.96,74,94,000 (ரூபாய் தொண்ணூற்றாறு கோடியே எழுபத்து நான்கு இலட்சத்து தொண்ணூற்று நாலாயிரம் மட்டும்)

| | ஒரு ஆண்டுக்கு | ஒவ்வொரு காலாண்டுக்கும் |
|---|---|---|
| மக்கட் தொகை பங்கு(40%) | 38,69,97,600 | 9,67,49,400 |
| பட்டியல் வகுப்பினர்/ பட்டியல் பழங்குடியினர் பங்கீடு(10%) | 9,67,49,400 | 2,41,87,350 |
| தனி நபர் வருமான பங்கீடு(15%) | 14,51,24,100 | 3,62,81,025 |
| தனி நபர் செலவின பங்கீடு(35%) | 33,86,22,900 | 8,46,55,725 |
| | 96,74,94,000 | 24,18,73,500 |

3. பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில் மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைப்படி 1998-99ம் ஆண்டிற்கான நிதி மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.137,19,94,000/- (ரூபாய் நூற்று முப்பத்தேழு கோடியே பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரம் மட்டும்) ஆகும். இத்தொகையிலிருந்து 15 சதவிகிதம் சமன்பாடு மற்றும் ஊக்கநிதிக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ.18,60,33,000/- (ரூபாய் பதினெட்டு கோடியே அறுபது இலட்சத்து முப்பத்தி மூன்றாயிரம் மட்டும்) எனக் கணக்கிடப்பட்டுள்ளது. மீதமுள்ள 85 சதவிகிதத் தொகை ரூ.118,59,61,000/- (ரூபாய்

நூற்று பதினெட்டு கோடியே ஐம்பத்தொன்பது இலட்சத்து அறுபத்தி ஓராயிரம் மட்டும்) கீழ்க்கண்ட இனங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

| | ஒரு ஆண்டுக்கு | ஒவ்வொரு காலாண்டுக்கும் |
|---|---|---|
| பேரூராட்சி ஊழியர்களின் ஓய்வூதிய நிதிக்கான ஒதுக்கீடு | ரூ. 16.60 கோடி | ரூ.4.15 கோடி |
| பேரூராட்சிகளில் மேற்கொள்ளப் படும் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை கவனிக்க பேரூராட்சி இயக்கக அளவில் நிறுத்தி வைக்க வேண்டியது | 4.00 கோடி | -- |
| சாலை வசதியினைப் பராமரிக்க பேரூராட்சி இயக்குநர் அளவில் நிறுத்தி வைக்க வேண்டியது | 10.00 கோடி | -- |
| மொத்தம் | ரூ. 30.60 கோடி | |

(ரூபாய் முப்பது கோடியே அறுபது இலட்சம் ஆகும்)

மீதமுள்ள தொகையான ரூ.87,99,61,000/- (ரூபாய் எண்பத்தேழு கோடியே தொண்ணூற்றொன்பது இலட்சத்து அறுபத்தி ஓராயிரம் மட்டும்) நான்கு காலாண்டுகளுக்கு கீழ்க்கண்ட மதிப்பினங்களைக் கொண்டு பங்கீடு செய்யப்படுகிறது.

1998-99ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு ரூ.87,99,61,000/-

(ரூபாய் எண்பத்தேழு கோடியே தொண்ணூற்றொன்பது இலட்சத்து அறுபத்தி ஓராயிரம் மட்டும்)

| | ஒரு ஆண்டுக்கு | ஒவ்வொரு காலாண்டுக்கும் |
|---|---|---|
| மக்கட் தொகை பங்கு(1991)(45%) | 39,59,82,450 | 9,89,95,613 |
| பட்டியல் வகுப்பினர்/ பட்டியல் பழங்குடியினர் பங்கீடு(1991)(20%) | 17,59,92,200 | 4,39,98,050 |
| தனி நபர் வருமான பங்கீடு(15%) | 13,19,94,150 | 3,29,98,537 |
| முக்கிய சமூகப் பணிகளுக்காக தனிநபர் செலவின பங்கீடு (20%) | 17,59,92,200 | 4,39,98,650 |
| | 87,99,61,000 | 21,89,90,250 |

4. மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் நகராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் ரூ.20.00 கோடியை (ரூபாய் இருபது கோடி மட்டும்) ஒரே தவணையில் பெற்றுக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. அத்தொகையை நகராட்சிகளுக்கு நகராட்சிகளின் சாலை மேம்பாட்டிற்காக பகிர்ந்தளிக்க நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. நகராட்சி ஊழியர்களின் ஓய்வூதிய நிதிக்காக ரூ.14.4844 கோடியை (ரூபாய் பதினான்கு கோடியே நாற்பத்தெட்டு இலட்சத்து நாற்பத்து நான்காயிரம் மட்டும்) ஒவ்வொரு காலாண்டின் கடைசி மாதத்தில் பெற்று, உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குநருக்கு வழங்கவும் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதத்தில் கேட்டுக் கொண்டதற்கிணங்க நகராட்சியிலுள்ள இளநிலை உதவியாளருக்கு கீழ்ப்பட்ட பதவியிலுள்ளவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதில் ஏற்படும் கால தாமதத்தை தவிர்க்க நகராட்சி ஆணையர்கள் ஒரு தனிக் கணக்கினை துவக்கி அதில் நகராட்சிகளுக்கு வழங்கப்படும் தொகையில் தேவைப்படும் தொகையினை செலுத்தவும் அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலே பார்வை 4ல் படிக்கப்பட்ட நேர்முகக் கடிதத்தில், கருவூலம் மற்றும் கணக்குகள் ஆணையர் கேட்டுக் கொண்டதற்கிணங்க , சென்னை மாநகராட்சியிடமிருந்து பிடித்தம் செய்து கருவூல கணக்குத் துறைக்காக வழங்கப்பட வேண்டியுள்ள பணியாளர்களின் தொகுப்பு காப்பீட்டுத் தொகை (Employees Group Insurance Scheme Management Contribution) ரூபாய் 4,51,23,208/- ஐ சென்னை மாநகராட்சியின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு அந்தத் தொகையினை நான்கு தவணைகளாக கீழ்க்கண்டவாறு பிடித்தம் செய்து மீதமுள்ள தொகையினை சென்னை மாநகராட்சிக்கு வழங்கவும் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| முதல் காலாண்டு | ரூ. 2,49,03,206 |
| இரண்டாவது காலாண்டு | ரூ. 67,40,002 |
| மூன்றாவது காலாண்டு | ரூ. 67,40,000 |
| நான்காவது காலாண்டு | ரூ. 67,40,000 |
| | ரூ. 4,51,23,208 |

5. மேலே பத்தி 2ல் ஆணையிட்டுள்ளவாறு 1998-99 ஆம் ஆண்டுக்கான மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு நிதி ஒதுக்கீட்டினை நகராட்சி நிர்வாக ஆணையர் அரசு நிதியிலிருந்து பெற்று ஒவ்வொரு மாநகராட்சி/நகராட்சிகளுக்கு உரிய தொகையை கணக்கிட்டு ஒவ்வொரு காலாண்டின் கடைசி மாதத்தில் வழங்க அரசு அதிகாரம் அளிக்கிறது.

6. மேலே பத்தி 3ல் ஆணையிட்டுள்ளவாறு பேரூராட்சி இயக்ககத்தில் ரூ.14.00 கோடியை (ரூபாய் பதினான்கு கோடி மட்டும்) ஒரே தவணையாக மாநில

நிதியிலிருந்து பெற்றுக் கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. பேரூராட்சிகளின் ஒய்வூதிய நிதிக்காக ரூ.16.60 கோடியை (ரூபாய் பதினாறு கோடியே அறுபது இலட்சம் மட்டும்) பேரூராட்சிகளின் இயக்குநர் பெற்று ஒவ்வொரு காலாண்டின் கடைசி மாதத்தில் உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குநருக்கு வழங்க அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. மேலே பத்தி 3ல் குறிப்பிட்டுள்ளவாறு நிதி பங்கீடு செய்து அதனை பேரூராட்சிகளுக்கு ஒவ்வொரு காலாண்டின் கடைசி மாதத்தில் பிரித்துக் கொடுக்க பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. அத்தொகையில் பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் பேரூராட்சி இயக்குநரின் கருத்திற்கிணங்க ரூ.7.60 கோடிக்கு (ரூபாய் ஏழு கோடியே அறுபது இலட்சம் மட்டும்) சாலை பணிகள் மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கப்படுகிறது.

8. மேலும் முதலாம் மற்றும் இரண்டாம் காலாண்டுகளின் முடிவில் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட அதிகபட்ச தொகையினை மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டுகளின் முடிவில் விடுவிக்கப்படும் தொகையில் சரி செய்து கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. மேலே பத்தி 2ல் குறிப்பிடப்பட்டுள்ள செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "3604 உள்ளாட்சி மன்றங்களுக்கும் சுயாட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 200. ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 1 திட்டத்தில் சேராதது BC (2001) மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின்படி நகர்ப்புற பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கான ஒரு மொத்த நிதி ஒதுக்கம்-நகராட்சி நிர்வாக இயக்குநர் கட்டுப்பாட்டிலுள்ளவை 09. உதவி மானியங்கள்-(2001)
> (D.P.C.No.3004 00 200 BC 0907)".

10. மேலே பத்தி 4ல் குறிப்பிடப்பட்டுள்ள கருவூலம் மற்றும் கணக்குகள் துறைக்கு நகராட்சி நிர்வாக ஆணையரால் செலுத்தப்பட வேண்டிய தொகை கீழ்க்கண்ட கணக்குத்தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "0075 பல்வகைப் பொதுவான பணிகள்-800 ஏனைய வரவுகள்-AW உள்ளாட்சி மன்றங்கள், மானியம் பெறும் பள்ளிகள், கல்லூரிகள் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை சேர்ந்த பணியாளர்களுக்கான தொகுப்பூதிய காப்பு நிதி திட்டத்தின் கீழ் அயல் இடப் பணியில் உள்ளவர்களுக்கு விடுப்பு சம்பளத் தொகை"
> (D.P.C.No. 0075 00 800 AW 0009)

11. மேலே பத்தி 3ல் குறிப்பிடப்பட்டுள்ள செலவினம் ...ட கணக்குத்தலை' யின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"3604 உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 200 ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 1 திட்டத்தில் சேராதது BA (2602) மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின்படி நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கான ஒரு மொத்த நிதி ஒதுக்கம் -பேரூராட்சி இயக்குநர் கட்டுப்பாட்டில் உள்ளவை 09 உதவி மானியங்கள் (2602)"

(D.P.C.No.3604 00 200 BA 0901)

12. இவ்வாணை நிதித்துறை அலுவல் சார்பற்ற ...32750/நநி(ம)குவ/98-1 நாள் 10.11.98ன் ஒப்புதலுடன் ...யிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

எஸ்.மாலதி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 5.
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை 108.
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள் (மேயர் வழி)
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்
அனைத்து உதவி பேரூராட்சி இயக்குநர்கள்
அனைத்து நகராட்சி ஆணையர்கள் (தலைவர் வழியாக)
அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள், தலைவர் வழியாக,
...

...ராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் அனைத்துப் பிரிவுகள்
...வூலம் மற்றும் கணக்குத் துறை அலுவலர், சென்னை 15.
...நிலத் தலைமைக் கணக்காயர், சென்னை 18.
...நிலத் தலைமைக் கணக்காயர், சென்னை 35.
...இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை 108.
...ளக் கணக்கு அலுவலர்(வடக்கு) சென்னை 1.

ஊரகவளர்ச்சித் துறை, சென்னை 9.

நிதி(நநி(ம)குவ)/(வருவாய் ஆதாரங்கள்) துறை, சென்னை 9.

அரசு இணைச் செயலர் (எஸ்கே.எஸ்),

நிதித்துறை,சென்னை 9 அவர்களின் நேர்முக உதவியாளர்

அரசு சிறப்புச் செயலர்,(ஞானதேசிகன்)

நிதித்துறை, சென்னை 9 அவர்களின் நேர்முக உதவியாளர்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 6/1/99